REGISTERED No. M. 1014.

உ

ஸ்ரீ வாணிசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.
வீடுபெறநில்.

வெண்டாமரை ௫.	1917-ம் ஆ டிசம்பர் மீ	இதழ் ௪௨.

பத்திராதிபர்:— சி. பங்காருப் பத்தர்,
கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்,
புதுவை.

வருடச் சந்தா

உள்ளூரார்க்கு ரூ 1	வெளிநாட்டுக்கு ரூ 2
வெளியூரார்க்கு ரூ 1¾	தனிச் சஞ்சிகை அணா 2

புதுவை — மைகோன் இன்ஸியா பிரஸ்.

பல கண்காட்சிகளில்
மெடல்களைபெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

பி. சுப்பராய், ஆயுர்வேத ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோவில் சந்நிதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து
இதைத் தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

---

24. இரசதாமிருதம் :— நாயா வர்க்கத்தைச் சார்ந்த அநேக அபூர்வ மூலிகைகளால் செய்யப்பட்ட இச் சூர்ணம் காபி, தேயிலைக்கும் பதிலாக உபயோகப்படுத்துவதற்காகவே தயார் செய்யப்பட்டிருக்கிறது. காபி தேயிலைக்குள்ள துர்க்குணங்கள் இதற்கில்லை. காபி பொடியை எவ்விதம் உபயோகிக்கிறோமோ அவ்விதமாகவே இதையும் உபயோகிக்க மிகவும் ருசியான பானமாகும். அரைக் குழந்தை முதல் விருத்தாப்பியர்கள் வரையில் எல்லோரும் உபயோகிக்கலாம். சுரம், ஜன்னி, கர்ப்பம், பிரசவம், காலரா முதலிய காலங்களில் மேற்படி சூர்ணத்தின் கஷாயத்தை பாலுடன் அல்லது பாலை சேர்க்காமல், சமயத்திற்குத் தக்கபடி உபயோகிக்க, ஜனங்களை ரோகங்களிலிருந்து குணப்படுத்துவது மன்றியில், ரோகம் வாராமல் காக்கும். பித்தவாயு, காசம், க்ஷயம், அஜீர்ணம், மலச்சிக்கல், தலைவலி முதலியவைகளைப் போக்கும். இரத்தத்தை சுத்தி செய்து தாது விருத்தியையும், தேக ஆரோக்கியத்தையும் தரும். அக்கினி மாந்தமுள்ளவர்களும், மதுமூத்திரம், அதிமூத்திர ரோகிகளுக்கும், அநுபானமாகவும் இதை வழக்கமாய் உபயோகித்துவந்தால் மதுமூத்திர ரோகிகளின் நீரிலுள்ள தித்திப்பையும் நீரின் அளவையும் குறைத்து, மூத்திர ரோகத்தை அடியோடு குணமாக்கும். தேகத்தின் உஷ்ணத்தைச்

உ

ஸ்ரீவாணி சகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.

வெண்டாமரை ௫.	1917-ம் ஆ டிசம்பர் மீ	இதழ் ௪௨.

திருவள்ளுவர் திருக்குறள்.

௪-ம் அதிகாரம்.

அறன்வலியுறுத்தல்.

அறன்—அறம் என்பதன் போலி. அறம் எனினும் நல்வினையெனினும் ஒக்கும். அறத்தைத் தருமம் என்பர் வடநூலார். அறமாவது உண்மைநூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அது ஏனைப்பொருளும் இன்பமும் போலாது இம்மை மறுமை வீடு என்னும் மூன்றனையும் தருதலால் அவற்றினும் உறுதியுடையதென்பதைக் கூறுதலென்பது அறன் வலியுறுத்தல் என்ற தொடர்க்குப் பொருளாகும்.

உலகத்தில் அருமையினும் அருமையாகிய மக்கட் பிறப்பைப் பெற்றவர்கள் அதன் பயனாக இம்மை மறுமை யின்பங்களை யெய்தல்வேண்டும். பேரின்பம் பெறுதல்வேண்டும். இவற்றை எது நமக்குத் தரவல்லது என்று நோக்குமிடத்து, அறம் ஒன்றே அளிக்கும் ஆற்றலுடையதென்பது நன்குவிளங்கும். அதுவே,

1. ‘வீடுபேற்றையுந் தரும், சுவர்க்கமுதலிய செல்வத்தையுங் கொடுக்கும்; ஆதலால் மக்கட்கு அறத்தின்மேற்பட்ட ஆக்கம் (மேன்மேலுயர்தல்) யாது?’ அவ்வறத்தின் மிக்க உறுதியில்லேவேயில்லையென்க.

ஆகவே மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் அறஞ்செய்தலை உறுதியாகப் பிடித்தல்வேண்டுமன்றோ? அறஞ்செய்யாவிடத்து உறுவது கெடுதியேயாகும். 2. ‘ஒருவனுக்கு அறஞ்செய்தலின் மேற்பட்ட ஆக்கமுமில்லை, அவ்வறத்தை மயக்கத்தால் மறந்து விடுதலின் மேற்பட்ட கேட்டைத் தருவதுமில்லை’ யென்க.

அவ்வறம் எங்ஙனம் செய்யப்படல்வேண்டும்? இல்லறம் பொருளளவிற்கு ஏற்பவும் துறவறம் உடம்பு நிலைக்கு ஏற்கவும் செய்தல்வேண்டும். மனம் வாக்குக் காயங்களால் அவற்றின் அறங்களாகிய நல்ல எண்ணங்களையும், நல்லசொற்களையும், நல்ல செயல்களையும் மேற்கொள்ளல் வேண்டும். ஆதலின், 3. ‘தத்தமக்குக் கூடும் வகையால் அறமாகிய நல்வினையை இடைவிடாமல் அது செல்லுமிடங்களினு லெல்லாம் செய்யக்கடவர்.’

அங்ஙனம் அறஞ்செய்யுமுன் அறத்தின் இயல்பு நன்கு தெரிந்துகொள்ளல்வேண்டும். அறஞ் செய்பவன் மாசற்ற மனமுடையவனா யிருத்தல்வேண்டும். தீயவற்றை நினைத்தால் மனம் குற்றமுடையதாகும். பிறர் அறியவேண்டிச் செய்யும் அறம் அறமாகுமோ? மனத்தில் குற்றமுடையவனாகியபோது அதன் வழிப்பட்ட வாக்கினாலும் உடம்பாலும் செய்யப்படுகின்ற அறங்களிலே பயன் உண்டாவதெப்படி? ஒருபோதுமில்லை. ஆதலின், 4. ‘அறஞ்செய்பவன் தன் நெஞ்சினிடத்துக் குற்றமில்லாதவனாகக்கடவன், அவ்வளவே அறமாவது; அது ஒழிந்த சொல்லும்

---

1. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.
2. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.
3. ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.
4. மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற.

வேடமும் அறிமெனப்படுவனவல்ல, ஆரவாரகுணத்தையுடையனவாம்.' பொறாமை முதலிய தீக்குணங்களோடு கலந்து நடந்ததை அறமெனச் சொல்லுதல் ஒருவாற்றானும் பொருந்தாது. அது மறமேயாகும். 5. 'பிறர் உயர்ச்சிபொறாமையும், ஐம்புல ஆசையும், அவை காரணமாகப் பிறர்பால் வருங்கோபமும், அது பற்றிவரும் கடுஞ்சொல்லுமாகிய இந்நான்கினையுங் கடிந்து இடையறாது நடந்தது அறமாவது' என்க.

இத்தகைய அறத்தை நிலையில்லாத உடம்பு நிலையாயிருக்கும்பொழுதே செய்தல்வேண்டும். ஏனெனின், செய்த உடம்பு அழியவும் உயிரோடுகூடி மற்றையுடம்பினும்செல்வது அவ்வறமேயாகும். அதுவே அழியாத துணையாகும். மற்றையெப்பொருள்களும் நம்மோடு வரமாட்டா. ஆதலின், 6. 'நாம் இப்போது இளையோமாகலின் இறக்கும்நாளில் செய்வோமென்று நினையாமல் அறத்தை நாள்தோறுஞ் செய்யக்கடவர், அவ்வாறு செய்த அறம் இவ்வுடம்பினின்றும் உயிர்போங்காலத்து அதற்கு அழிவில்லாத துணையாம்' என்க.

அறம் உயிர்க்கு அழியாத்துணையென்பது கண்கூடு. உலகத்தே சிலர் சிவிகையேறிச் செல்லுதலையும், சிலர் அச்சிவிகையைச் சுமந்து செல்லுதலையும் பார்க்கின்றோம். இங்ஙனம் சிலர் இன்புறுதற்கும் சிலர் துன்புறுதற்கும் காரணம் என்ன? அவரவர் செய்த நல்வினையும் தீவினையுமேயன்றோ? அதனையெவர் மறுக்கமுடியும்? ஆதலின், 7. 'அறத்தின்பயன் இதுவென்று யாம் ஆகம அளவையால் உணர்த்தவேண்டுவதில்லை; சிவிகையைச் சுமப்பவனோடு செலுத்துவானிடத்துக் காட்சியளவையினாலே உணரப்படும்' என்க.

அஞ்ஞானம், அகங்காரம், அவா, விருப்பு, வெறுப்பு என்னும் ஐவகைக் குற்றத்தால் நல்வினை தீவினையென்னும் இருவினைகள் உண்டாகின்றன. அவை உள்ளவரையும் உயிர் உடம்போடு

---

5. அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கு
   மிழுக்கா வியன்ற தறம்.
6. அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
   பொன்றுங்காற் பொன்றாத் துணை.
7. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
   பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

கூடிநின்று அவ்வினைகளின் பயன்களாகிய இன்பதுன்பங்களை நுகர்கின்றன. இங்ஙனம் உயிர் உடம்போடு கூடுதலாகிய வாழ்நாள் ஒழிந்தாலன்றி வீடுபெறுதல் எவர்க்கும் முடியாது. ஆகவே நாம் அதனை விரைந்து ஒழிக்க முயலவேண்டும். அறமே அதனை யழித்தற்குரிய கருவியாம். ஆதலின், 8. ‘செய்யாமல் கழியும் நாள் உண்டாகாமல் ஒருவன் அறத்தைச் செய்வானாயின் அச் செயல், அவன் உடம்போடு கூடும்நாள் வரும் வழியை வாராமல் அடைக்குங் கல்லாம்’ என்க.

அறம் தருவது வீட்டின்பம் ஒன்றேயோ? இம்மை யின்பத்தையும் புகழையும் அவ் வறமே தருகின்றது. எங்ஙனமெனின், அறத்தோடு பொருந்தாவழி இன்பமேது? புகழேது? ஈண்டு இன்பம் காமநுகர்ச்சியாதலின், தன்மனைவியோடு கூடும் இன்பமே இன்பமாகும். அதுவே புகழுமுடைத்து. பிறன் மனையோடு கூடும் இன்பம் இன்பமன்றோவெனின், பாவத்தால் வரும் பிறனில் விழைவு முதலாயின அக்கணத்துள் இன்பமாய்த் தோன்றுமாயினும், பின்பு துன்பமாய் விளைதலின் அது இன்பமன்றாம். ஆதலின், 9. ‘இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பமாவது, அதனோடு பொருந்தாது வருவனவெல்லாம் இன்பமாயினும் துன்பத்துட் சேர்வனவாம்; அதுவேயுமன்றிப் புகழுமுடையனவல்ல’ என்க.

ஆகையினால், மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும், செய்யத்தக்கது இன்னது, செய்யத்தகாதது இன்னது என்று தெரிந்து, செய்யத்தக்கதைச் செய்தும் செய்யத்தகாததைச் செய்யாது தவிர்த்தும் உய்திபெறுதல்வேண்டும். 10. ‘ஒருவனுக்குச் செய்தற்பான்மையது நல்வினையே, ஒழிதற்பான்மையது தீவினையே’ என்றுணர்க.

---

8. வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

9. அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

10. செற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

இதுகாறுங் கூறியவாற்ருல், மக்கட்கு அறத்தின் மிக்க உறுதியில்லையென்பதும், அது செய்யாவழிக் கேடுவரு மென்பதும், மனம் வாக்குக் காயங்களால் அறஞ் செய்தல்வேண்டுமென்பதும், அங்ஙனம் செய்பவன் மனமாசற்றிருக்க வேண்டுமென்பதும், நிலையில்லாத வுடம்பு உள்ளபோழ்தே அறஞ்செய்யவேண்டு மென்பதும், அறமே உயிர்க்கு அழியாத துணையென்பதும், அறம் வீடுபயக்குமென்பதும், அறஞ்செய்வாரே இம்மையின்பமும் புகழும் எய்துவரென்பதும், நல்வினையே செய்யத்தக்க தென்பதும், தீவினையே ஒழிக்கத்தக்கதென்பதும், பிறவும் பெறப்பட்டன.

அறப்பூங்கொத்து.

---

1. ஆநந்தமுரசு

நான் கலைமகளுக்காக ஓர் வியாசம் வரைந்துகொண்டிருக்கையில் திடீரென்று ஓர் சிந்தையில் ஆழ்ந்தேன். "நல் வாழ்க்கையின் பயன் யாது?" என்றதோர் வினு என் மனத்துள் உதித்தது. நான் அவ்வினுவினை யப்புறப்படுத்துவதற்கில்லை. அதற்குத் தக்கதோர் சமாதானம் நாடிநின்றேன்.

வாழ்க்கையின் பயன் எத்தகைத்து? வறுமையாளரைப் பின்னும் மிடிக்குட் படுத்தி அவர்களை வருத்தி நம் செல்வத்தை வளர்ப்பதிலா? அல்லது விண்ணவரையும் ஏவல்கொள்ளும் வண்ணம் வாய்ந்த வனிதையர் கூட்டுறவிலா? அல்லது பலரும் புகழ்ந்துபேச அவர்கள் மனம்போல் அரங்கத்து ஆடுவதிலா? எதில் உள்ளது வாழ்க்கைநலன் என்பது யோசித்தேன். அதைப்பற்றி யோசிக்க யோசிக்க ஓர் கனவுகாண்பவன் நிலையை யடைந்தேன். ஓர் உருவம் என்முன் தோன்றியது. முரசின் முழக்கமென ஓர் குரலில் சாற்றியது:

"இவற்றில் ஒன்றிலுமல்ல. நீ பிறந்தகாலத்து உலகம் இருந்ததைவிட இன்புற்றிருக்கும்படி புரிவதிலேயே—நீ செய்த நன்றிகளை உலகம் மறக்காமல் உன்பெயரைக் கௌரவப்படுத்தவேண்டுவதில்லை. பலர் மெச்சும்படி அவர்கள் வழங்கும் இச்சக மொழிகளுக்காக உன் பொருள் உடல் ஆவி இவற்றை வீணில் செல்லவிட வேண்டுவதில்லை. ஆனல் இருள் பரந்த வெளியில் ஒளிபரப்பியும், மாந்தரின் இன்பத்தைப் பெருக்குவதிலும் இவற்றைச் செலவிடு. கைம்மாறு கருதுதல்வேண்டா. நிஷ்காமியமான கருமமே சிறப்புறுவது. இலையெனில் நீ தொடும் ஒவ்வொரு கர்ரியமும் வீணேயாவது மல்லாது பாபகரமானதும் ஆகும். பிறருக்கு

உதவிபுரிவதே கடமையெனக் கொள்ளல்வேண்டும். தேச நலத்திற்காகவே உன் சிந்தையையும் உன் பொருளையும் உன் உழைப்பினையும் அர்ப்பணம் செய்!"

"மேலும்—பேர்! கீர்த்தி! இவை யாவை? நாம் இப்பொழுது பேசி முடிந்த கூற்றினை யொக்கும். அதை நாடுவோர் வீண் பெருமை யாளராவர். தன்னகத்துறும் களியும் சந்துஷ்டியும் உலகத்தார் செய்யும் சிறப்பினும் சிறந்தன. இத்தகைய வீரர் எண்ணிறந்தவர் உலகத்திற் றோன்றி மாய்ந்துள்ளனர். இவ்வுலகிற்கு ஏலாத பெரியோர் தோன்றி மறைந்துளர். நல் வாழ்க்கையின் பயன் சுயநலம் நாடா திருத்தலே—சுயநலம் நாடாது மறம் தலையெடுக்கவொட்டாது அறப்போர்புரிந்து, கூற்றமே முன்வந்து நிற்பினும் அதனைப் பொருட்படுத்தாது தர்மத்தைக் கைப்பிடித்தலே நன்மையுடைத்து. ஆக, உலகத்தார் கூறும் மதிப்புரையைக் கவனியாது உன் கடமையை—உலகத்திற்கு இன்பம் ஊட்டுவித்தல் என்னும் கடமையை—கைப்பிடி—"

முரசின் முழக்கம் சிறிது நின்றது.

"தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்"

என்று கூறிய சாத்தனாரின் அறமொழிகள் என் நினைவிற்கு வந்தன.

மறுபடியும் முரசம் முழங்கலுற்றது.

"மறத்தின் அநாகரிகத்தை வெளிப்படுத்து. தீவினையெனும் பூதம் அறத்தைக் களைய முயலுங்காலையில் காட்சியாளன் என வீணில் நில்லாதே—அறப்போர்புரி. சத்தியமே பேசு—"

"ஏன்? சில சமயங்களில் சத்தியம் அருவருப்பை விளைவிப்பதாகுமே—?" என்று நான் வினவினேன்.

"ஆம்! இருக்கக் கூடும். வறுமையாளரின் சிற்றில்களை யொழித்து அவை யிருந்த தலங்களில் மாளிகைகள் கட்டி வாழ எண்ணமுள்ள பேராசைப் பெரும்பூதம் பிடித்தலையும் மாந்தருக்கு வாய்மை இன்பகரமாக இராது. அவர்களைப்பற்றி உனக்காவதென்ன? வாய்மைக்கு ஊழியன் நீ. துரோகிகளும், பாபிகளும், சோரர்களும் மாளிகைகளில் வாழ்வர். ஆனால் அவர்கள் மனத்தோ ஒவ்வொரு கணமும் தோன்றி மறையும் ஏக்கமும் பீதியும் அவர் வாழ்நாளைப் பாழாக்குகின்றன. மிடியுற்றானேயாயினும் அவனது கவலையற்ற வாழ்நாளினுக் கிணையாகாது இவர்கள் வாழ்க்கை.—".

மறுபடியும் முரசம் சற்று ஓய்ந்தது.

என்னைச் சுற்றிலும் ஓர் முறை நோக்கினேன். வாய்மை முதலிய அறங்கள் ஒளிகுன்றவும், அறியாமை என்னும் கள்ளிருளில் பேராசைப் பெரும்பூதம் தலைவிரித்தாடவும், அன்பு என்னும் செல்வி அருமை குலைந்தொழியவும், சுயநலப்பிரபு மஞ்சத்தில் இன்புடன் வீற்றிருக்கவும், இச்சகம் பேசி நடித்துப் பொருள் பறிக்கும் கயவர் பெருமிதம்

பேசவும், நாகரிகம் என்னும் பித்து பக்தியைப் பரிகசித்து இகழ்ந்துரை செய்யவும், மௌடிகம் மதர்த்துத் திரியவும் நான் கண்டேன்.

உளைந்த மனதுடன் இதைக் கவனித்தேன். இந்தக் கூத்து எப்படி முடியுமென்று ஆலோசித்தேன்.

"இவ்வுலகென்ன இவ்வளவு துன்பம் உற்றதாக இருக்கின்றது. இந்தக் கொடுமையை அகற்றவொண்ணுதா?—" என்று நான் என்முன்னிருந்த உருவத்தை வினவினேன்.

"அது எப்படிக்கூடும், மனிதன் தன் மனத்துள்ள சுயநலத்தையும் அழுக்காறினையும் நீக்கினலன்றி? வாய்மையும், அறமும், வாழ்க்கைக்குரிய நல்வினைகள் என மாந்தர் உணர்ந்து அதற்கேற்றபடி முயலல் வேண்டும்."

இதற்குள் என் கையிலிருந்த இறகு கீழ் வீழ்ந்தது. அந்தச் சப்தத்தில் நான் விழித்துக்கொண்டேன்.

2. ஆநந்தக் கனவு.

நகர்ச்சந்தடியைவிட்டு, மனச் சந்துஷ்டி யற்றவனுய் மனுஷ்ய சகவாசத்தைத் துறந்து ஒருநாள் தனியாக ஒருமலைச் சாரலின் பக்கலில் உலவிக்கொண்டிருந்தேன். அப்பொழுது இரவு சமீபித்துக்கொண்டிருந்தது. விண்ணகத்திருந்த தாராகணங்களும் சந்திரனும் அருகில் சலசலவென்று சப்தித்துச் சென்ற ஒரு அருவியில் பிரதிபலித்து விளங்கின. மனத்தகத்தே எண்ணிறந்த துயர்கள் என்னைப் பாதித்தனவெனினும் என்முன் பரவியிருந்த காட்சி என்மனத்தே சிறிது இன்பம் விளைத்தது. எனினும் என்மனம் சிந்தையிலாழ்ந்திருந்தது. வாழ்க்கை நலன் யாது? மறத்தை எப்படி அகற்றுவது? என்றெல்லாம் எண்ணியது. ஒரு மெல்லிய பூங்காற்று தவழ்ந்து வந்தது. நான் ஒரு துயிலிலாழ்ந்தேன். கனவில் சில வெள்ளிய பட்டுடைதரித்த மாந்தர் தம்முன் மலர்களைத் தூவிக்கொண்டே ஏதோ ஒரு பாட்டு பாடிக்கொண்டிருந்ததாக எனக்குப் பட்டது.

"பொங்குதம் மங்களம் எங்கும் தங்குக!
அன்பு ஓங்குக! இன்பம் வளர்க!"

என்ற மொழிகள் மாருதத்தினூடே தவழ்ந்து வந்து என்செவியிற் புகுந்தன. என்முன் ஓர் யுவகன் வந்து நின்றுன். அவனைச் சூழ்தர இருந்த பரிஜனங்கள் அவனுக்குப் பொன்னுலாகியதோர் ஆசனம் இட்டனர். கவிகளும், சித்தர்களும் அவனைத் தொழுதேத்தினர். யாவரும் வணங்கினர். இருடிகள் போற்றினர். அவன் அறக்கடவுள் என அறிந்தேன்.

அவன் என்னை விளித்தான். என்னைத்தன் ஆசனத்தருகே உட்காரும்படி வேண்டினுன். நான் கண்ணீர்விட்டுக் கலங்கினேன்.

"என்னை நெருங்கிவா!" என்றனன்.

நான் அருகிற்சென்றேன்.

அவன் என்செவியில் ஒரே ஒரு வார்த்தையை ஓதினுன். வேத வாக்கினும் சிறப்புடையது அது என்று நான் கருதினேன். அஞ்ஞா

னம் என்னும் அந்தகாரத்து மூழ்கிக்கிடந்த எனக்கு அது ஒரு விண் விளக்கமென இருந்தது. என் மனத்திருந்த அஞர் அகன்றது.

வாழ்க்கையிலுள்ள துன்பமும், மாந்தர் புரியும் பாபகர்மங்களும் என்மனத்து ஆழ்ந்திருந்தன. இதனின்றும் உய்யும் வகை கிடையாதென்றே தீர்மானித்துவிட்டேன். இப்பொழுதோ?—மங்களகரமான அவனது வசனங்கள் என் மனத்திற்கு ஒருவித உற்சாகம் அளித்தன. கலக்கமுற்ற என்மனம் தெளிவுற்றது. அவன் வசனங்கள் என் செவியில் இன்னமும் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன.

எனக்கு இன்னது சொல்வதென்று புரியவேயில்லை. அவன் காலில் அடியற்ற மரம்போல் சாய்ந்தேன். என்னைத் தேற்றிப் பின்னும் கூறலுற்றான்:

“குழந்தாய்! நீ உலகத்தில் பணக்காரன்—செல்வவந்தன்—ஆக இச்சிப்பாயானால், உன் அயலகத்தான் பொருளைக் கவர்பவன் ஆவாய். அதுவல்ல உன் சகோதரர்களை நேசிக்கும் வழி. நீ அதிகாரஞ் செலுத்தவும், ஆணையிடவும் விரும்புவாயானால் நீ பிறரை ஏவலாளராகச் செய்கின்றாய். அதுவல்ல அன்பின் இயற்கையான மார்க்கம். நீ பெரியவனாதலாவது பிறனொருவன் சிறுமையை அடைதலாற்றான். குழந்தாய்! இவ்வித துச்சமான எண்ணத்தைக் களைந்துவிடு. பேருக்கும் கீர்த்திக்கும் ஆசைப்பட்டுச் சுழலவிடும் மனத்தை மதிகொண்டு அடக்கு. காமக்குரோதாதிகளை நீக்கு. அன்பு என்னும் இம்மந்திரத்தைக் கையில் கொள். தேசநலத் தொண்டினைக் கைப்பிடி.—போ! குழந்தாய்! மெய்த் தொண்டரில் ஒருவனாக இருந்து தவம் பெறு!”

அறக்கடவுள் மறைந்தான். என் வழிகாட்டி மின்னெனச்சென்றுவிட்டான். என் மனம் துயரில் ஆழ்ந்தது. கானகத்தே தவிக்கும் தனியனுக்கு அமுது ஊட்டி யுதவிய உபகாரியென வந்த அவன் மறைந்துவிட்டான். அவனது வசனங்கள் என்மனத்துச் சுழன்று சுழன்று ஒலித்தன.

“பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!
அன்பு ஓங்குக! இன்பம் வளர்க!” என்னும் அவ்வற மொழிகள் மறுபடியும் மறுபடியும் என் செவியிற் கேட்டன. நானும் அதன் பொருளை யுணர்ந்தவனாக, உற்சாகத்துடன் எழுந்திருக்க முயன்றேன். திடீரென விழித்தெழுந்தேன். காட்சியில் நிகழ்ந்த மற்றவை மறந்தேன். அவ் வாறுதல் பயக்கும் வசனங்கள் மாத்திரம் என் இதழ்களைவிட்டு அகலவில்லை. ஆநந்த பரவசனாய் மறுபடியும் அவ்வாசிவசனங்களை வாய்விட்டுக் கூறினேன்:

“பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!
அன்பு ஓங்குக! இன்பம் வளர்க!”

ரா. வாசுதேவசர்மா,

புதுவை.

கோவூர்க் கிழார்.

"எய்திய வாழ்க்கையை ஏற்றமாச் செய்து
பொய்யுடல் போகையிற் புகழுடல் நிறுவும்
மெய்வழி விளக்குவ மேலோர் செயலே."

நல்லொழுக்கம், பரோபகாரச்சிந்தை, தெய்வபக்தி, பேரறிவு, தேசாபிமானம், திண்ணியவூக்கம், மலைபோன்ற விபத்தினும் நிலைபெறா ஆண்மை முதலிய அரிய பெரிய குணங்கள் அமைந்த ஆன்றோரது உண்மை வரலாறுகளை நாம் அறிந்து மகிழ்வதால் நமக்கு நல்லறிவும், நற்பிரயோசனமும் உண்டாமென்பது அநுபவசித்தமாய் விளங்குவதோருண்மை. இத்தகைய பெரியோர் சரிதங்களைப் பேணிப்படிப்பதால் உயர்ந்த ஒழுக்கமும், உன்னத சிந்தனையும், தமக்கும் பிறர்க்கும் நன்மை பயக்கும் ஊக்கமான செய்கையும் உணர்த்தப்படும். தன்முயற்சி, புத்தி பூர்வமாய்க்கொண்ட கருத்தை நிறைவேற்றுவதில் பொறுமை, துணிந்து கரும்முடித்தல், நிலைபெறும் மனநிறை இவற்றின் திறத்தை விளக்கும் அரிய திருஷ்டாந்தங்கள் அவற்றில் அநந்தம். இக்குணங் குறிகள், மாசற்றுயர்ந்த மனிதரைச் சிறப்பிக்கும் ஒழுக்கவடிவாய்த்தோன்றி இன்னின்னார் இன்னின்ன காரியங்களைச் செய்துமுடிக்கத் திறம் பெறுவாரென்பதை வெள்ளிடை மலைபோல விளக்கத்தக்கன. அன்றியும், மானமும், மனவுறுதியுமுள்ளவர்கள் கீழ்குலத்தோராயிருப்பினும் தம்மட்டில் நிறைசெல்வரும், கனமிக்கோரும் ஆவார்கள் என்பதை வற்புறுத்திக் கூறும். இவர்கட்கு வெல்லரிய பெருந்தடைகளும் ஒருபொருளாகத் தோன்றாமலும், மலைபோல் தோன்றும் பிரதிபந்தங்கள் எதிர்க்கப்பட்டபொழுதும் தளராது உழைக்குந்திறமும், சகிக்கும் வல்லமையுமேம்பட்டு ஊக்கமளிக்க வல்லன

இங்ஙனம் அபூர்வ சாமர்த்தியத்தாலும், அசாத்தியத் திறமையாலும், மிகவும் மேலான பதவிக்குவந்து உத்தம குண சீலர்களாய்ப் புகழுடம்பெடுத்த அப்பெரியார் பெயர் இன்றைக்கும் உலகத்தில் அழியாது நிலைபெற்றுவருகின்றன. இத்தகைய மேலோர் சரிதம் உலகிற்கு நற்புத்தி போதமாகிய நல்வழிகாட்டியாம். ஆகவே, இந்நல்லோர் சரிதத்தை ஊன்றி உளம்பதியச் சாவதானமாய் வாசித்து அவர்தம் ஜீவிய வரலாற்றால் வெளியாகும் மேலான உண்மைகள், அநுபவங்கள் முதலியவற்றை நன்குணர்ந்து அவைகளைக் காரியாதிகளில் தருணமறிந்து உபயோகிப்பார்களாயின் பெரும்பயனடைதல் ஒருதலை.

மேற்கூறிய குணஞ்செயலுடைமைக்குப் பெரிதும் பொருந்தியவர் புறநானூற்றில்வரும் புலவர்களில் "கோவூர்க் கிழார்" என்னும் பெயரிய பெருந்தகையே ஆவர். இவரது குணவமுதங்களை ஆராய்ந்து

களிக்கலே இவ்வரலாற்றிற்கு ஏற்புடைத்தாதலால் பழைய நூல்களில் தலைசிறந்ததாய புறநானூற்றிற்கண்ட இவரது அருமை பெருமைகளை மட்டும் சிறிது ஆராய்வாம். ஒப்புயர்வற்ற திப்பிய மக்களின் குணஞ் செயலாதிய வைபவங்களை ஆராய்தல் உலகம் நல்வழியிற் செல்வதற்கு முக்கிய ஏதுவன்றோ?

கோவூர்க்கிழார் என்பவர், புதுவைக்கடுத்துள்ள "கோவூரை" ஜனன தேசமாகக் கொண்ட வேளாண் மரபினர். 'கிழார்' என்பதன் பொருள் உரிமையாளர் என்பது. கிழமை—உரிமை, கிழமை என்னும் பண்புப்பெயர் இறுதிநிலைவிகுதியும், இடையகரவுயிருங்கெட்டு ஆர் என்னும் உயர்திணைப் படர்க்கைப் பன்மை யீறுவந்து புணர்ந்து கிழார் என முடிந்தது. வேளாண் மரபினர்க்கு இப்பட்டப்பெயர் பன்னெடுங் காலமாக வழங்கிவருகின்றது. கடைச்சங்கவாணர் நாற்பத்தெண்மருள் அரிசிற்கிழார், ஆலத்தூர்க்கிழார், ஆவூர்க்கிழார், மூலங்கிழார், குன்றூர்க்கிழார், காரிகிழார், கூடலூர்க்கிழார் முதலியோரும் அவரென்க. "காணியாளர்" எனவழங்கும் வழக்கும் இக்கிழார் என்பதன் பொருளடியாகவே வந்ததுவாம். இப் புலவர்பெருமான் விரிந்த சிந்தனை, பரிந்துருகுந் தயாளம், மேலான செல்வாக்கு, நடுநிலைமை திறம்பாமை, தருணமறிந்து கூறும் நற்போதம், உறுதிதவருமை முதலிய உத்தமகுணங்களுக்கு உறைவிடமாய் யாவரும் பரவும் மேவருஞ் சிறப்பினர். இவர்காலத்தே புலவர்களை ஆதரித்த சோழவேந்தரில், இவர்பால் மெய்யன்பும், உண்மை அபிமானமும், சொல்லின் நன்மதிப்பும் கொண்டிருந்தவர் சோழன் நலங்கிள்ளியும், நெடுங்கிள்ளியுமே ஆவர். கோவூர்க் கிழார்க்கும், இவர்கட்கும் நிகழ்ந்த சம்பவமே இங்கு நாம் கூறவந்த விஷயம். இவ்விஷயம் பற்றி நமக்குத் தெரிந்தவரை புறநானூற்றின் ஆதாரங்கொண்டும், சரித்திர ஆராய்ச்சி வல்லுநர் கண்டறிந்த உண்மை தழுவியும் ஒருவாறு எழுதப்படுகிறது. குற்றங் காணின் அறிஞர் பொறுப்பாராக.

சோழன் சேட்சென்னி நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி இவர்கள் குணஞ்செயலாதிய விஷயங்களை நாம் ஆராய்ந்தாலன்றிக் கோவூர்க்கிழார் உத்தமச் செயல்களைக் காண்பது கூடாதாகும். என்னெனில், சோழர்கள் அரசுரிமையின் விவாதத்திடையே கோவூர்க்கிழார் சம்பவம் ஒன்றியிருத்தலாலென்க. இக்கிழாரின் முழுவரலாற்றையும், நாம் ஒழுங்காய் அறிந்து மகிழ்தற்குப் போதிய ஆதாரமொன்றுங் காணப்படவில்லை. ஆயினும், புறநானூற்றில் வரும் 44, 45, 46, 47, 68. எண்ணுள்ள சோழர்கள் விஷயமாய் எழுந்த பாடல்கள் இவரது உயர்ந்த குணநலங்களை விளக்குதற்குப் போதியவை என்னும்படி உள்ளன. இச்சிறிய ஆதாரத்தை வைத்துக்கொண்டுதான் நாம் மேற்செல்லவேண்டியிருக்கிறது.

இனிக் கிழாரின் சம்பவம் வருமாறு:—

கி. பி. முதல் நூற்றாண்டின் இறுதிக்காலத்தே சோழநாட்டை வெகுநீதியும், திறமையும் விளங்கச் செங்கோலோச்சி இமயத்திலும் தனது புகழ் விளங்கப் புலிக்கொடி நாட்டி வானாடெய்திய சோழன் கரிகாலனுக்கு, சோழன் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்ற மக்கள் தோன்றி, தங்களுள் அரசுரிமை அடையும் விஷயத்தில் மாறுபட்டு ஒருவரை யொருவர் பகைத்து, நெடுங்கிள்ளி உறையூரையும், நலங்கிள்ளி காவிரிப்பூம் பட்டினத்தையும் கைப்பற்றி அரசாண்டு வந்தனர். இவர்களில் நெடுங்கிள்ளியைப்பற்றிய வரலாறுகளொன்றும் விசேடமாய்த் தெரிந்துகொள்வதற்கில்லை. புலவர்களும் அதிகமாக இவனைப் புகழ்ந்து பாடாதொழிந்தனர். இதற்குக் காரணம் யாதென ஆராயுமிடத்து, புலவர்க்கு அவசியமாய் இருக்கவேண்டிய கல்வி, ஈகை, கருணை, பெருந்தன்மை முதலிய உத்தம குணங்களுக்கு மாறாக, அகம்பாவம், மூர்க்க சுபாவம், இரக்கமின்மை, இரவலர்க்கின்னாமை செய்தல் முதலிய துர்க்குணங்கள் மிகுந்தமையே யாமெனத் தெரிகிறது. இக்குறிகள் மேல் வருஞ்சரிதையில் ஆங்காங்குக் காணப்படும். இவனைக் காரியாற்றுத் *துஞ்சிய நெடுங்கிள்ளி என்றும் பெயர் வழங்குவர்.

(தொடரும்.)

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோயமுத்தூர்.

புகழேந்தி.

"வெண்பாவிற் புகழேந்தி" என்பது ஓர் பழைய பாட்டு. இவரைப்பற்றிய சரிதம் ஒன்றும் இதுவரைத் தமிழில் உரைநடையாக வரவில்லை. புலவர் புராணத்தார் செய்யுளாகப் பாடியுள்ளாரென்பது உண்மையே. அது செய்யுள் உருவாக இருப்பதாலும், கர்ன பரம்பரையாகக் கூறப்படும் கதையினையே கூறுவதாலும் இக்காலத்தோர்க்குப் பெரிதும் பயன்படாது. ஆகவே இவ்வாசிரியருடைய உண்மைச்சரித்தைத் தெரியும்வரை எழுத முயல்கின்றேம். பிழையுளதேல் உலகம் பொறுக்க.

இதனை யெழுதுவதற்குப் பெரிதும் பயன்பட்ட நூல்கள் புலவர் புராணம், தனிச்செய்யுட்சிந்தாமணி, தனிப்பாடற்றிரட்டு, தொண்டைமண்டலச்சதகம், பாண்டிமண்டலச்சதகம், விநோதரசமஞ்சரி, தமிழ்நாவலர் சரிதை என்பனவே. இவற்றுள் தமிழ்நாவலர் சரிதையின் கூற்றே வலியுடைத்து. விநோதரசமஞ்சரி எளியநடையில் கர்னபரம்பரையாக வழங்குவதைக் கூறுவது.

---

* துஞ்சிய என்னுஞ் சொல்லின் பொருள் இறந்த என்பதே.

புகழேந்தியார் புலவரேனத்திகழ்தல்.

தொண்டைமண்டலத்துள் செங்கற்பட்டுக்கருகில் பொன்விளைந்த களத்தூர் எனுங் கிராமம் ஒன்றுண்டு. இப்போது தென்னிந்தியா இருப்புப்பாதை வழியாகப் போகையில் ஒத்திவாக்கம் எனுமிடம் இருக்கின்றதல்லவா. அஃதே பொன்விளைந்த களத்தூர் எனப்படுவது. இவ் வூரினைக் களத்தூர் என்றும் வழங்குவார்கள். தஞ்சாவூர் என்பது தஞ்சையென்றும், சென்னபட்டணம் என்பது சென்னையென்றும், கருவூர் என்பது கருவையென்றும் மரீஇ வழக்காற்றில் இருப்பதுபோல இதுவும் களந்தையென வழங்கும்.

இவ்வூரில், 1100 கி.பி. க்குச் சிறிதுமுன்பே துளுவவேளாளர் குலத்தில் நற்றாய்க்கும் நற்றந்தைக்கும் அவர்தம் அருந்தவப் புதல்வராய்ப் பிறந்தனர் நம் புலவர்திலகர். அவர்கள் பெயர் அறிய இயலவில்லை. புலவர்தம் இயற்பெயரே அறிய இயலவில்லையென்றால் அவர்தம் பெற்றோர் பெயரை எவ்வாறறிதல் இயலும். இவர் களத்தூரிற் பிறந்தனர் என்பதைப் படிக்காசுப்புலவர் தம் தொண்டைமண்டலச் சதகத்து, "நூலார் கலைவல்ல" எனும் முதற்குறிப்புள்ள செய்யுளினீற்றடியில், "மாலார் களந்தைப் புகழேந்தியுந் தொண்டை மண்டலமே" என்பதானுணரலாம். பாண்டிநாட்டில் பிறந்தனரென்று சிலர் கூறுகின்றனர். இதனையும், இவர் வேளாளகுலத்துப் பிறந்தனர் என்பதையும்,

"பன்னருஞ்சீர் வண்மையுறு பாண்டிவள நாட்டணியாத்
துன்னலுறும் வேளாளர் தொல்குடியின் மகவானோன்
கன்னலின்பா கனையதமிழ் கற்றவர்தங் கண்போல்வான்
பொன்னவள்கோன் பதம்பரவும் புகழேந்திப் புலவோனே."

எனவரும் புலவர் புராணத்தானுணர்க.

இவரது இளமையைக் குறித்தாவது இவர் கல்வி பயின்றதனைக் குறித்தாவது ஓர்கதையும் வழங்கக் காண்கிலம். நாம் பின்செய்யும் காலவாராய்ச்சியானும் அவர் நூலானும் இவர் இன்ன இன்ன நூற்கள் பயின்றிருப்பர் என்பதனை அறிய இயலும். தொல்காப்பியம் இடைச்சங்கந் தொட்டுவருகின்றமையின் அதனைப் பயின்றிருப்பர். அகத்தியம், செயிற்றியம் முதலிய நூற்களுள் கிடைத்த பகுதியினை ஓதியிருப்பர். மற்று, சங்கக்காலத்தனவும் அதற்கு அடுத்த காலத்தனவுமாம் பஞ்சகாவியம், சிறுபஞ்சகாவியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு, சைவத்திருமுறைகள், வைணவப் பிரபந்தம் முதலியன பயின்றிருப்பர்.

நாம் பின்னர்க் காலவாராய்ச்சியில் பேராசிரியர், புகழேந்திகாலத்தவர் எனக்கூறியுள்ளோம். அவருக்குப் பிந்தியவரே நச்சினார்க்கினியர் எனும் உரையாசிரியர். இவர்களது இரு உரைகளையும் புகழேந்தி படித்திலர் என்பது சொல்லாமலே அமையும். நன்னூலாசிரியராகிய பவணந்

தியார் 13ம் நூற்றாண்டின் முற்பகுதியுள் சிறப்புற்றிருந்தவர். காலவாராய்ச்சியுள் நேமிநாதம் இயற்றிய நேமிநாதர், ஒட்டக்கூத்தர் சிடரெனக் கூறுவோம். ஆகவே நன்னூலையும் நேமிநாதத்தையும் இவர் பயின்றிராரென்பது திண்ணம். நச்சினார்க்கினியர் சேனாவரையர்க்குப் பிந்தியவர் என்பது, நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் கிளவியாக்கம் முதற்சூத்திரத்தின் உரையில், "சேனாவரையர் பண்புத்தொகை என்றாரெனின்" என எழுதுதலின் உணரப்படும். ஆனால் புகழேந்தியார் சேனாவரையர் உரையினைப் பயின்றிருப்பர். சேனாவரையர் மேற்குறித்த சூத்திரத்தின் உரையுள் "உரையாசிரியர் கூறினாராலோ" எனக் கூறுவதான் இளம்பூரணர், சேனாவரையர்க்கு முந்தியாதல் உணரப்படும். ஆகவே இளம்பூரணர் உரையினைப் புகழேந்தி பயின்றிருப்பரென்பதற்கு ஐயமோ? அடியார்க்கு நல்லார் ஒட்டக்கூத்தர் பாடிய இராமாயணத்து, "மக்களிழந்த இடும்பையினும்" எனும் பாடலைத் தமது உரையுள் எடுத்தாளலால் புகழேந்தியார்க்குப் பிந்தியவரேயாவர்.

இவர் இவற்றினை வரன்முறையாக நல்லாசிரியனை யடுத்துப் பயின்று மெய்ப்புலமை வாய்ந்திலங்கியவர். இவர் புலமையினை,

"பொய்க்கவிஞ ரனைவருக்கும் புலியென் றௌவையும் புகழ்
மெய்க்கவியில் வல்லனென விளம்பிடுமொண் படைந்தோன்"

எனவரும் புலவர் புராணத்தாலும்,

"கேட்டாலு மின்பங் கிடைக்குங்கண் டீர்கொண்ட கீர்த்தியொடும்
பாட்டா லுயர்ந்த புகழேந்தி சொன்னபடி…………………"

எனுந் தொண்டைமண்டலச் சதகத்தாலு முணரலாம். இவர் வெண்பா இயற்றுவதில் வல்லவர்.

இவர்க்குப் புகழேந்தி என்னும் பெயர், இவருடைய புலமைக்குச் சான்றாக அளிக்கப்பட்ட பெயரென்பது யாவரும் அறிவர். இவர்க்கு வேறு பெயருண்மையு மறிகிலேம். அந்தோ! இவ்வாறே மெய்ப்புலவர் பெயரெலாம் அறியப்படாமல் அறிகின்றனவே. ஒட்டக்கூத்தன் பெயராவது (ஆனந்தக் கூத்தன் என்பது) அறிகின்றோம். அவன் ஒட்டக்கூத்தன் எனப் பெயர் பெற்றதற்குக் காரணமுந் தெரிகின்றது. கம்பனுடைய இயற்பெயர் அறிகிலேம். எனினும் அவன் அப்பெயர் பெற்றதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஆனால் புகழேந்திக்கு அப்பெயர் எக்காரணத்தால் வந்ததென அறிதலும் இயலவில்லை. கம்பர்க்குப் பெயர் வந்ததாகக்கூறும் கட்டுக்கதைபோன்றதுங் காண்கிலம்.

இவர் இளமையைப் பற்றியும், பண்டிதரெனத் திகழ்ந்தமையைக் குறித்தும் வழங்குவனவற்றைக் கூறுவாம்.

இவர் செங்கலங்கை வடுகநாதமுதலியார்பால் வளர்ந்தனர் எனத் தெரியவருகின்றது. ஒட்டக்கூத்தர் சங்கரர்பாலும், கம்பர் சடையப்பர்பாலும் வளர்ந்ததுபோன்று இவர் வடுகநாத முதலியாரிடத்து வளர்ந்த

னர். இவ் வடுகநாதமுதலியார் ஒருகால் விருந்தளித்தற்கு வேண்டிய ஏற்பாடுகளனைத்தும் செய்ததும் அவரது தம்பி இறந்தனர். அந்தப் பிரேதத்தை மூடிவைத்து, வந்தவரைப் போங்கள் என்னாது விருந்திட்டனர். இது, அப்பெரியாரைப் புகழ்ந்த புகழேந்தியார்,

"தன்னுடன் கூடப் பிறந்த சகோதரத் தம்பியுயிர்
அந்நிலை மாண்டது தோன்றாமல் மூடிவைத் தன்னமிட்டான்
மன்னவர் போற்றிட வாழ்செங் கலங்கை வடுகனுக்குக்
கன்னனுஞ் சோமனு மோஇணை யாகக் கழறவதே."

எனப் பாடியதால் தெளியக்கிடக்கின்றது. இஃதே அவர் பாடிய முதற்பாடல் போலும்.

(வரும்.)

கயற்கண்ணி கவினன்.

பிறப்பிறப்பு.

(வெண்டாமரை ௫, இதழ் ௧௧, 225-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறாய சரீரத்தில் மூன்றரைக்கோடி நாடிகளும், மூன்றரைக் கோடி உரோமங்களும், முப்பத்திரண்டு பற்களும், கை கால்களி லுள்ள இருபது விரல்களிலும் இருபது நகங்களுந் தோன்றும். அன்றியும் வீரியம் ஆழாக்கும், பித்தம் உழக்கும், கபம் நாழியுரியும், நிணம் இருபது பலமும், மேதை ஐந்நூறுபலமும், ஊன் நூறுபலமும், உருகுதிரம் மூன்றுபலமும், இருகுதிரம் மூன்றுபலமும், மூளை பன்னிரண்டு பலமும், செந்நீர் பத்துப்பலமும், என்பு மூந்நூற்றறுபதுபலமும் உண்டாகும். மயிர் முதலனைத்தையும் தொகுத்த அளவிடில் ஆயிரம்பலமுமாகும். அருவருப்புறும் மலசல விசர்க்கங்கட்கு அளவில்லை. இவைகளின் அளவைகளை வேதமுதலிய நூல்கள் வெவ்வேறு விதமாகப் பேதித்துங் கூறும். வாகடத்தில் சுக்கிலம் உழக்கு இரத்தங் குறுணி சுத்சரத்தம் நாழி என்றும், கெற்போபநிடதத்தில் எலும்பு நூற்றிருபது பலம் சுக்கிலம் இரண்டுபலம் மேதசு பன்னிரண்டு பலம் என்றும் பேதித்துக் கூறும். அஃது சங்காரகாலந்தோறும் சிருட்டிபேதம் பேதித்துண்டாகையால் அவ்வக்காலத்துத் தோன்றிய நூல்களும் பேதித்துக்கூறும். ஆயினுஞ் சிவனருளிச்செய்த திவ்வியாகமங்களுள் ஒன்றற்கொன்று விரோதமுண்டாவதில்லை.

இங்ஙனமாய சரீரம் கருப்பையில் அழியினும் அழியும். பத்துமாதத்திற் பிறந்தவுடனே அழியினும் அழியும். பிறந்தபின் சிலகாலம் வளர்ந்து அழியினும் அழியும். மூன்று வயதுக்குமேற் பதினாறு வயது

வரையிலுள்ள பாலாவத்தையில் அழியினும் அழியும். அதற்கு மேல் நாற்பது வயதுவரையிலுள்ள தருணவத்தையின் அழியினு மழியும். அதற்குமேற்பட்ட விருத்தாவத்தையின் அழியினும் அழியும். இவ்வாறு நிலையின்றி அழிவதாய இந்தப் புழுப்பொதிந்த பொல்லாத புலையுடலைப் பொருளெனவே அறிவுடைய பெரியோர்கள் ஒருகணமும் மதியார்கள். தான் நாடோறும் அனுபவித்தறிகிற துன்பம் நிறைந்த அருவருப்பாய நிலையில்லாத இச்சரீரத்தை நிலையுடைமையென அதிவிருப்பத்தோடு பற்றும் முழுமூடசிகாமணிகட்கு ஆகம சாத்திர வாயிலாகப் பலமுறை இவ்வுடற் குற்றத்தை எடுத்துரைப்பதால் என்னபயன். பொற்குடமாயினும் மலந்தங்குறின் அற்பரும் அதனைவிரும்பிக் கையாற்றொடார். தேவாமிருதமாயினும் பருகினால் மலமாக்கும். சுத்த கங்கை முதலிய பல தீர்த்தங்களாடினும் பசும்பாலில் அநேககாலம் ஊறவைத்தெடுத்த கருங்கம்பளம் சிறிதேனும் வெண்மையாகாத வாறுபோல, உமிழ்முடை யாக்கை ஒருகாலுஞ் சுசியுறாது. ஆன்மாவோ சிவபெருமானின் உண்மை நிலையைத் தேர்ந்தறிந்தால் சுத்தியுறும். அவ் வான்மா சுத்தியுறுவது எவ்வாறெனில், முதலில் நாடோறும் சரீரசுத்தி செய்யவேண்டும். சரீரசுத்தி இல்வழி. ஆன்மா சுத்தியுறாது. பிறகு மோக்ஷத்தைத் தருவோனாகிய ஞானாசாரியனையடைந்து அவரிடத்தே மாசற்ற ஞானோபதேசம்பெற்று, அம்மேலான உபதேசவாக்கியத்தை நிச்சயமாகக்கொண்டு, உறவு பகை ஆசையாகிய தனது குற்றத்தைப்போக்கி, முப்பொருளியல்பும் உள்ளவாறறிந்து, யாவருமனத்தால் நினைத்தற்கரிய சிவனது திருவடித்தாமரையிலே ஆன்மா கலந்து நிற்கச் சுத்தியுறும். இவ்வாறு முப்பொரு ளியல்பும் உள்ளவாறுணர்ந்து ஆன்மசுத்தியுற்று முதிர்ந்த பேறிவாகிய பிரிவருஞானம்பெற்ற ஞானிகள், மாணிக்கவியாபாரி கருங்கல் வியாபாரியாதற்கு விரும்பான் அதுபோலவும், காமந்தணியத் தனது மனைவியைத் தழுவுபவன் தனது மகளைத் தழுவ விரும்பான் அதுபோலவும், கணவன் கையால் தனத்தில் வருடுண்டு காமநோயுற்று அவனைத் தழுவ என்னும் பெதும்பைபயர் தமது தனத்தைக் குழந்தை பசியால் வருட மனங்குழைந்து ஒழுகுமுலைப்பா லூட்டுவாரேயன்றி அம்மகவைச் சேரவிரும்பார் அதுபோலவும், இப்புவியர்போலப் பலவினைகளை அனுபவித்தாலும் அவ்வினைப்பயனை முன்செய்த கன்மம் என்று எண்ணுவார்களேயொழிய, தமது அனுபவமாகக் கொள்ளக் கருதார்.

மேலும் காற்று வீசுந்தோறும் ஆகாயத்தை விட்டு நீங்காத வாறுபோல, சரீரம் இருவினைப்பயனால் வருந்துந்தோறும், சுத்த துரியாதீத நிலையினின்றும் நீங்காத சிவஞானிகளுக்கு அவ்விருவினைப் பயனால் விளையுந் துன்பங்கள் சிறிதும் அணுகா. அவ்விருவினைப்பயனைச் சிவபெருமானே ஏற்று அச்சிவஞானிகள் விரும்பின செய்தார்க்கு இன்பமும் வெறுப்பன செய்தார்க்குத் துன்பமும் அடையச் சேர்த்துவர். நீரோடு சேர்ந்துகாணும் தாமரையிலை அந்நீரோடு ஒன்றாதவாறுபோல

வும், புளியம்பழத்தின் மேலோடு அப்பழத்தோடு பொருந்தாதவாறுபோலவும், மருந்தும் மந்திரமும் உள்ளாரிடத்துக் கொடியவிடம் மிகுத்தும் வருத்தாதவாறுபோலவும், சிவத்தினடங்கிய அன்பரிடத்து உடல் முகந்த வினை வருத்துவபோல் நிகழினும் அதனால் நடுங்கி வருந்தார். இம்முறை தெரிந்து தம் அறிவினைச் சிவவறிவிடை யடக்காது முற்பயனை யனுபவிக்கையில் யானெனதென் றகங்கரித்து விருப்புடன் அனுபவிப்போர் அவ்வினைப்பயனை முன்போல உண்டாக்குவர். சித்தசுத்தியும் சரீரசுத்தியும் ஒத்த ஞாதாக்கள் அனுதியாகத் தொன்றுதொட்டு வரும் பிறப்பிறப்பை ஒழித்துப் பரமானந்த சுகத்தை யடைவார்கள். மனம் வேறு சொல்வேறாய சித்தசுத்தியற்றவர்கள் புறம்பேயுள்ள மலையத்தனை மண்ணையும் கங்கையிலுள்ள சலமுழுவதையுங்கொண்டு சரீரசுத்தி எவ்வளவு செய்தாலும் அவர்களுடைய தீவினை ஒருசிறிதும் நீங்காது. அவர்களுக்குக்கிடைக்கும் புண்ணியபலமும் அற்பமாம். (இதனானே உடற்கிரியை உயிரின்பொருட்டே செயற்பாலதென்பது) அவர்களுக்குண்டாகும் காமவின்பமும், குட்டவியாதியுடையவன் அக்கினியைச்சேர்ந்த அந்நேரத்தில் அடையுஞ் சுகத்தைப்போலவும், மலசலங்கழிக்குமிடத்துண்டாகும் இன்பத்தைப் போலவுமாம். கருவிழிச் செவ்வாய் மகளிரின் மலமோசனக்குழியைக் கலந்து கழிக்கும் சிற்றின்பமும் முதலிற் சுகம்போலத்தோன்றிப் பிறகு துக்கத்தையே கொடுக்கும். (குட்டநோய் வாலிபரின் காமநோய்க்கும் அக்கினி மடவார்க்கும் உவமிக்கப்பட்டது.) அவ்வின்ப காரியத்தை ஆராயுங்கால், எவரும் அருவருப்படையு மலமானது பன்றி நாய் இவைகளின் நாவிற்கு நலத்தைக்கொடுத்தல் போலவும், பிணமானது நாய், நரி, கழுகு, ஈ, பேய் இவைகட்கு இன்பத்தைக் கொடுத்தல் போலவும், மாதரின்பமும் காமவிகார மூடான்மாக்களுக்குச் சிறிதின்பத்தைக் கொடுத்து இருபயனுஞ் சிதைத்துப் பெரும்பழிச்சுமையைக் கொடுக்கும். அறிவுடையோர்கள் இந்த நிலையற்ற சிற்றின்பத்தைச் சீயெனவெறுத்து, வாக்கு மனத்துக் கெட்டா மகதேவனருளாற் சிற்சத்தி யனுபவமான பேரின்பத்தை அனுபவித்துக்கொண்டிருப்பர். அவர்தம் சிறப்பே சிறப்பாகலான் அந்நெறியே நெறியெனக் கோடல் பிறப்பிறப் பியல் புணர்ந்தஞ்சு மெம்மனோர் கடனென ஞாபகஞ்செய்தேன்.

அங்ஙனஞ் சிவபெருமான் திருவடியடைந்தோர் செயலை உய்த்துணருமிடத்து, அரசன் சிறையிடைப் பட்டோரும், பேய்பிடி யுண்டோரும் செய்யுஞ் செயலெல்லாம் அரசனதும் பேயினதுஞ் செயலேயன்றிப் பிறிதின்றாம் அதுபோல, உடன்முகந்த வினையனைத்தையும் சிவனே என்றுகொள்ளத் தாம் பிறப்பிறப்பினரால் அனுபவித்தற் கரிதாய் அப்பாற்பட்ட சிவாநுபவத்தைத் தமதனுபவமாக அனுபவித்து அவ்வின்பத்தழுந்தலே யன்றித் தமக்கென ஒன்று ஆகுமெனவும் ஆகாதெனவும் வினைமூலமாய விருப்பு வெறுப்பின்வழிச் சென்று ஒன்றையுஞ் செய்

யார் என்பதேயாம். ஆதலால் அவரிடை நிகழ்கின்ற செயலனைத்தும் சிவன் செயலேயாம். அத்தகைய சிவபத்தருக்கு வழிபாட்டைச் செய்வோர் முறையே மேல் மேலுள்ள இன்பெலாமருந்திச் சிவனடிக்கீழ் அமர்வர் என்பது.

(இன்னும் வரும்.)

ந. கண்ணுச்சாமிப்பிள்ளை,
சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை.

முத்தபுரி இரகசியம்.

(உடையார் பாளையம்)

(வெண்டாமரை ரு, இதழ் கக, 228-ம் பக்கத் தொடர்ச்சி.)

அதி விசித்திரமான தேர்: — ஸ்ரீ பயறணீசுவரருக்காக மகா-ள-ள-ஸ்ரீ சமஸ்தானாதிபதி அவர்களால் நூதனமாய்ப் போடப்பட்டிருக்கும் இரதத்தின் சிறப்பை ஆதிசேடனாலும் சொல்லமுடியாது. உலகத்தில் பிறந்தவர்கள் அவசியம் ஏழு ஆச்சரியகரமான பொருள்களை (Seven wonders of the world) பார்த்துவிட்டு இறந்தால்தான் பிறந்ததின் பலன் அடைந்ததாகுமென மேல்நாட்டார் கூறுகின்றனர். அந்த ஏழோடு இவ்வூரின் தேரையும் சேர்த்து எட்டாகவே சொல்லவேண்டுமென்பது எனது துணிபு. அது உருவத்தில் சற்றுச் சிறிதாயிருந்தபோதிலும் அதில் உள்ள பிம்பங்களின் அழகும் உருவங்களின் அமைப்பும் கண்டோர் மனத்தைக் கவராதுவிடா. தேர்களில் உருவத்திற் பெரியது திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ சுவாமியின் திருத்தேர் என்பது யாவரும் அறிந்ததாயினும், உருவத்தில்மட்டும் பெரியதேயன்றி வேலைப்பாட்டில் இந்தத்தேருக்கு எத்துணையும் ஒப்பாகாது. இதைச்செய்த சிற்பியின் வல்லமையும் சாஸ்திர ஆராய்ச்சியும் மேற்படி தேரின் பிரதிமைகளினால் நன்கு விளங்குகின்றன. அதன்கண்ணுள்ள ஒவ்வொரு உருவங்களும் அதி ஆச்சரியகரமாயும் வெகு அழகாயு மிருப்பதாலும் எல்லாவற்றையும் எடுத்து ஒவ்வொன்றாய் விவரிப்பதென்றால் விரியுமென்றஞ்சி அவற்றுள் மிகவும் முக்கியமானவற்றைப் பற்றிமட்டும் தெரிவிப்பாம்:

பஞ்சமூர்த்திகள்: — மூஷிகவாகனத்தில் விக்கினேசுவரரிருப்பதும், ரிஷபவாகனத்தில் பரமேசுவரன் பார்வதியுடன் பக்கத்தில் தேவர்கள் புடைசூழ எழுந்தருளியிருப்பதும், மயில்வாகனத்தின்மேல் ஷண்முகப்பெருமான் வள்ளி, தெய்வயானையுடன் எழுந்தருளி யிருப்பதும், சத்தி, சண்டிகேசுவரர்களு மிருப்பதும், கந்தர்வர்கள் புஷ்பமாரி பொழிவதும் பார்த்தால் எல்லாம் வல்ல இறைவன் உண்மையில் காட்சிகொடுக்க எழுந்தருளியிருப்பதைப்போன்றே யிருக்கிறது. அதி அபூர்வமான வேலைப்பாடுகள்.

தக்ஷிணாமூர்த்தி:—சனகாதி நால்வர்களுக்கும் உபதேசம் செய்யக் கல்லால விருக்ஷத்தின் கீழ்ப் புலித்தோலாடையுடன் எம்மிறைவன் தவ

வேடம்பூண்டு ஒருகையிற் புத்தகத்துடனும், சின்முத்திரையுடனு மிருப்பதையும், நால்வர்களும் நிட்டைபுரிதலைக் கவனித்துக்கொண்டிருப்பதையும் காணக் காணக் களிப்புண்டாகின்றது. கல்லாலவிருக்ஷம் உயிருள்ள மரத்திற்போலவே இலைகள், காய்கள், பழங்கள் முதலியவை தற்சொரூபமாகக் காணப்படுகின்றன. யோகத்திலிருக்கும் எம்பெருமானைச் சற்று உற்றுநோக்குவோமாயின், சமுசார சாகரத்திலேயே இடையறாது உழன்று கிடக்கும் எம்போலிகட்கே ஏதோ ஒருவித நல்லறிவு தோன்றுவதுமன்றி, பேரின்பத்தில் பற்றுதலுமுண்டாகிறது.

காமதகனம்:— பரமசிவம் தவம் புரிந்துகொண்டிருக்கும்போது மலர்க்கணைகளையுடைய மன்மதன்போய்த் தவத்தைப் பங்கம்செய்வதற்காக வில்லைவளைத்துப் பாணம்போடுவதும், பரமசிவம் தவவேடம் புனைந்து தண்டு கமண்டலம் தரித்து நிட்டையிலிருப்பதும் கவனிக்கத்தக்கவை. அழகிற்சிறந்தவன் மன்மதன் என்பதற்கிலக்காக மேற்படி உருவம் வெகு அழகாகவே அமைக்கப்பட்டிருக்கிறது.

காலசம்மாரம்:—என்றும் பதினாறுவயதுள்ள மார்க்கண்டேயர், எருமைக்கடா வாகனத்தில் எமகிங்கரர்கள் புடைசூழக் கோரரூபத்துடன் வரும் எமதருமனைக் கண்டு அஞ்சி மனம் திடுக்கிட்டோடி, லிங்கோற்பவமாயிருக்கும் கருணாநிதியைக் கட்டிக்கொள்ளுதலும், விடாது பாசத்தைப்போட்டுக் காலன், லிங்கத்தைக் கட்டிக்கொண்டிருக்கும் மார்க்கண்டேயரை இழுப்பதும், மகா உக்கிரத்துடன் லிங்கத்தினின்றும் வெடித்துக்கொண்டு எழுந்து கங்கையோர்பாகன் நமனைச் சம்மாரம் செய்வதும், எருமைக்கடாவின் மேலிருந்த எமன் கீழே கிரீடம் சிதற விழுந்து கிடப்பதும் கண்டால் நிரம்பப் பயத்தையும், மனதிற்கே ஒரு திகிலையு முண்டாக்குகிறது.

மகிஷாசூர மர்த்தனம்:— துர்க்கை வெகு கொரேமாய் மகிஷாசூரனுடன் போர்புரிதலும், அசுரன் பற்பல உருவந் தரித்தலும், கடைசியாக மகிஷமுகத்துடன் தோன்றியதும் சத்தி சூலத்தால் குத்திச் சம்மாரம் செய்வதும், அவன் உடலிலிருந்து இரத்தம் சிந்திக்கொண்டிருப்பதும் பார்ப்பவர் மனம் திடுக்கிடச்செய்கிறது.

குருந்தமரத்தடியில் சிவகணங்களுடன் வாதவூரருக்கு அனுக்கிரகிக்கக் கையிற் சிவஞானபோதத்துடன் சிவபெருமான் வீற்றிருப்பதும் எம் மாணிக்கவாசகர் பக்கத்தில் கைகட்டி நின்றுகொண்டிருப்பதும் பார்க்கத்தக்கதாயிருக்கிறது.

பிக்ஷாடனர்: — தாருகா வனத்தில் ரிஷிபத்தினிகளிடம் எம்மாண்டவன் பிச்சாடன மூர்த்தங்கொண்டு பக்கத்தில் புள்ளிமானுடன் நிற்பதும், ரிஷிபத்தினிகள் பிக்ஷைபோடுவதும், அவர்கள் காமவலையிலகப்பட்டவர்களைப்போன்று நிற்பதும் அதிவிநோதம்.

நடராஜர் நர்த்தனம்:—ஆணிப் பொன்னம்பலத்தில் அம்பலவாணன், பக்கத்தில் நந்திதேவர் மத்தளம் அடிக்கவும், பிரம்மா தாளம் போடவும், மகாவிஷ்ணு உடுக்கை அடிக்கவும் நர்த்தனமாடுவதும், தும்புருநாரதர் வீணை வாசிப்பதும், பக்கத்தில் காளியின் தாண்டவமும் பார்க்கப் பார்க்கப் பரமாநந்தம் பயக்கின்றது.

இரணியசம்மாரம்:—சாக்ஷாத் ஸ்ரீ வைகுண்ட நாதனாகிய எம்பெருமான், தான் இறத்தற்கு ஏதுவில்லாத வரங்களைப் பெற்றவனாகிய இரணியனைக் கொல்வதற்காக நரசிம்மாவதாரம் எடுத்து அவனைச் சம்மரிப்பதைப் பார்த்தால் கண்டோர் மனம் கலங்கும்படி மிக்க பயங்காரத்தையுண்டுபண்ணுகிறது.

கஜேந்திர மோக்ஷம்:—ஸ்ரீ முகுந்தன் கருடாரூடராய், பரம பக்தனாகிய கஜேந்திரனுக்கு உதவிபுரிய முன்னின்றிருப்பதும் கஜேந்திரன் முதலை வாயில் சிக்குண்டிருப்பதும் ஒரே மரத்துண்டில் செய்யப்பட்டு வெகு விசித்திரமாயிருக்கிறது.

காமதேனு கற்பகவிருக்ஷம்:—கற்பகவிருக்ஷத்தின் அடியில் காமதேனு நிற்பதைப் பார்த்தால், காமதேனுவே நிஜரூபத்துடன் நிற்பது போன்றிருக்கிறது. அதின் அங்க அமைப்பும் அழகும் நேரிலேயே கண்டு களிக்கத் தக்கன. கற்பக விருக்ஷத்தில் உலகத்தோருக்கு வேண்டிய பொருள்கள் முழுவதும் அடங்கியிருப்பது அதிசயிக்கத் தக்கது.

கிருஷ்ணலீலைகள், கோபிகாஸ்திரீகளின் வஸ்திரங்களைப் புன்னைமரத்தில் கட்டிவிட்டு உட்கார்ந்துகொண்டு வேணுகானம் செய்வதும், காளிங்க நர்த்தனம் முதலியவைகளும், அநேகம் கந்தர்வர்கள் புஷ்பமாரி சொரிந்துகொண்டு நிற்றலும், யானைகளும் குதிரைகளும் அவைகளின் பேரில் உருவங்களும் ஒரே கட்டையில் செய்யப்பட்டிருக்கின்றன. எல்லாம் மரவேலைகளாயிருந்தபோதிலும் அவ்வுருவங்களனைத்தும் வார்த்தெடுத்து நகாஸ்வேலை செய்திருப்பதைப்போலவே காணப்படுகின்றன.

இன்னும் அநேக அபூர்வமான பிம்பங்களும் நிறைந்த இத்தேரைச் செய்து முடிப்பதற்குச் சுமார் ரூ. 10,000–க்கு மேல் செலவானதாகத் தெரிகிறது. அதின் விசித்திரத்தைப் பற்றி எம் சிற்றறிவுக்கெட்டிய வரை விரிவாகக் கூறியிருப்பினும், எம் ஆப்த நண்பர்காள்! அதை நேரில் கண்டு களித்தாலன்றி நன்கு விளங்காது. அவசியம் பார்க்கத் தக்கது.

அரண்மனை:— லக்ஷ்மிவிலாசம், பட்டகசாலை, ரெங்கவிலாசம், நாடகசாலை, நித்திரைகூடம், கிருஷ்ணவிலாசம், ராமசாமிகூடம், ஜெயவிலாசம் முதலிய பெயருடைய அற்புதக் கட்டடங்களும் இன்னும் அநேக கட்டுகளு மடங்கியது.

பெரும்பாலும் எல்லாக் கட்டடங்களும் சலவைக் கற்களாலும் கருங்கற்களாலும் கட்டப்பட்டு மிகவும் அருமையான வேலைப்பாடுகள்

செய்யப்பட்டிருக்கின்றன. முக்கியமான சிலவற்றை மட்டும் இங்குக் குறிப்பிடுவோம். லக்ஷ்மி விலாசத்தின் முன்வாசற்படியில் சுதை வேலையில் வல்லோனாகிய ஒருவனால் அதிஅற்புதமாகச் செய்யப்பட்ட இரண்டு சிப்பாய்கள் கையிற் பிடித்த துப்பாக்கிகளுடன் நிற்க, நடுவில் கமலாசனத்தில் லக்ஷ்மி வீற்றிருக்க, இரண்டு மதகஜங்கள் ஜலம் பொழிய, இரண்டு கந்தர்வஸ்திரீகள் பூமாரிசொரிய, பணிப்பெண்களிருவர் வெண்சாமரம் வீசுதல்போலமைத்திருத்தலும், பட்டகசாலையில், கிருஷ்ணலீலைகளும் இன்னும் பல பிம்பங்களும், நாடகசாலையில் பல வேலைப்பாடுள்ள பொம்மைகளும், ரங்கவிலாசம் வாசற்படி முகப்பில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் சேஷசயனத்தில் அன்பிற்குகந்த தேவிமார் பக்கத்தில் நிற்க, யாழ்வல்ல ஒருமாது இன்னிசையோடு பாடுவதைக் கேட்டானந்திப்பதுபோன்றிருத்தலும், சரஸ்வதி கையில் வீணையோடு பத்மாசனத்தில் இருத்தலும் பார்க்கப் பார்க்க மனம் பரவசப்படுகின்றது. பட்டகசாலையில் உள்ள பிம்பங்களிற் சில சிதைவுண்டிருக்கின்றன. மகம்மதியர்கள் கலகக் காலத்தில் ஷியார்களால் உடைக்கப்பட்டவையென்று சொல்லுகிறார்கள்.

ரெங்கவிலாசம் மகா-ள-ள-ஸ்ரீ சமஸ்தானாதிபதி அவர்கள் தர்பார் கூடுவதற்காகவே அரண்மனையில் நடுவில் வெகு உன்னதமாக அமைக்கப்பட்டுள்ளது. அதில் ஸ்ரீராமர் பட்டாபிஷேக படம் ஒன்று பெரிதாய் நடுவில் வைக்கப்பட்டுள்ளது. இன்னும் அநேக விசித்திரமான பொம்மைகளும், குளோப்களும், நாற்காலிகளும், சோபாக்களு மிருக்கின்றன. தூண்கள் முழுவதும் அதிவேலைப்பாடுகளமைந்த சலவைக் கற்களே. அநேக சாஸ்திர புஸ்தகங்களும், சரித்திர புஸ்தகங்களு மடங்கிய சரஸ்வதி மாலொன்று மிருக்கிறது. இவ்வளவு பெருமை வாய்ந்த அரண்மனையைச் சுற்றி முற்காலத்தில் அகழியிருந்ததாகவும் தெரிகிறது. அதற்குச் சான்றாகக் கீழ்ப்பாரிசத்தில் பெரிய படுகுழிகளும் கற்களால் கட்டப்பட்டுச் சிதைவுண்ட கரைகளும் இப்போது மிருக்கின்றன.

இவ்வளவு முக்கியமான க்ஷேத்திரத்திற்குச் சமீபத்தில் அநேகம் சிவ ஸ்தலங்களும் விஷ்ணு ஸ்தலங்களு மிருக்கின்றன. முக்கியமாக, சுமார் 10-மைல் தூரத்தில் கங்கைகொண்ட சோழபுரம் என்ற சிவஸ்தலமும், ஸ்ரீ முஷ்ணம் என்னும் பெருமாள் ஸ்தலமும் மிகப் பிரசித்தி பெற்றவை.. கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள கோவில் தஞ்சாவூர் பெரியகோவிலைப்போல் பெரிதாயிருக்கிறது. கோபுரம், லிங்கம் முதலியவைகளும் மிகப் பெரியனவே. சமயம் வாய்ப்புழி, அவைகளைப்பற்றித் தனியாக விவரிப்பேம்.

S. V. G. பாலன்,
ஞானப்பிரகாச சபைக் காரியதரிசி,
உடையார்பாளையம்.

299

தமிழ் மருத்துவப் பெட்டி.

சயனவகை.

பூவணையின் குணம்.

தீபாக் கினிதழையுந் தின்றமருந் தாலெழுந்த
தாபாக் கினியுந் தணியுங்காண் — யாபார
நட்புவரும் விந்தூறு நாளுமுட லஞ்செழிக்கும்
புட்பவணைக் கென்றே புகல்.

இ–ள். முல்லை, மல்லிகை முதலிய மலரணையில் துயில்பவர் கட்கு, பசி, போகத்தில்விருப்பம், சுக்கிலவிருத்தி, சரீரம் செழித்தல் இவையுண்டாம். மருந்தினால் உண்டாகிய வெப்பம் நீங்கும் என்க.

இலவம்பஞ்சு, பருத்திப்பஞ்சு இவ்வணைகளின் குணம்.

இலவின்பஞ் சுப்படுக்கைக் கேகு மனலம்
அலர்பருத்திப் பஞ்சி னணையோ — உலவிரத்தம்
விந்திவைக ளோப்பெருக்கு மேல்விரக முண்டாக்கும்
குந்து சுரத்தை யழைக் கும்.

இ–ள். இலவம்பஞ்சு மெத்தையிற் படுக்கையால் உட்சூடுநீங்கும். பருத்திமெத்தை இரத்தம், விந்து, காமம், சுரம் இவைகளை விருத்தி செய்யும் என்க.

இரத்தின கம்பளத்தின் குணம்.

பஞ்சவன் னஞ்சேர் நற்கம் பளத்தறுஞ் சலவைத்தோடம்
விஞ்சிடும் பித்தந் தாது விர்த்தியு முண்டாஞ் சீதம்
அஞ்சிடுங் கோப வைய மலைந்திடும் பாண்டு வோடு
நஞ்சுக ளெல்லாந் தீரு நலம்பெறு முட்டணமாமே.

இ–ள். வெள்ளை, சிவப்பு, மஞ்சள், பச்சை, கறுப்பு என்னும் ஐந்து நிற மயிர்களால் செய்த இரத்தினக்கம்பளத்திற்கு, சீதளதோடம், குளிர், கபாதிக்கம், பாண்டுவீக்கம், பற்பலவிடம் இவைகள் நீங்கும். பித்தமும், சுக்கிலதாதுவும் அதிகரிக்கும். இது மிகவும் சூடாம் என்க.

சகலாத்தின் குணம்.

குளிர்சுரத்திற் கேற்குங் குளிர்பனியைப் போக்கும்
வளர்பெரும் பாடதனை மாற்றும் — அளிகள்
அகலாத் தெரிய லணியளக மின்னே
சகலாத் தெனவேநீ சாற்று.

இ–ள். அழகிய கூந்தலையுடைய பெண்ணே! சகலாத்தென்னும் உரோம வத்திரம் நடுக்கல் சுரத்திற்கு உபயோகப்படுவதுமன்றி, குளிர், பனி, அசிர்க்கரநோய் என்னும் பெரும்பாடு இவைகளைநீக்கும்.

இது உட்டணகுணத்தையுடையது. வர்ணச்சேர்க்கையால் அநந்த பேத முற்றிருப்பினும் அவைகட்கும் அக்குணமே யாகும். ஆனால் வெண்மை, பசுமை, நீலம், ஊதா என்னும் நிறங்களுள்ளவைகள் அற்ப சூடாம்.

தாழம்பாயின் குணம்.

தாழம்பாய் வாந்தி தலைச்சுழற்றல் பாண்டுபித்தம்
ஆழ்ஞ்சேர் நீராமை யாம்பிணியும் — வீழுந்தண்
ணீரிழிவும் போக்குமிக நேசித்த வர்க்குலகில்
காரிழியுங் கூந்தன்மின்னே காண்

இ-ள். மேகம்போன்ற கூந்தலாளே! தாழம்பாய், வாந்தி, தலைச் சுழற்றல், பாண்டுரோகம், பித்ததோடம், நீராமைக்கட்டி, வெகுமூத்திரம் இவைகளை விலக்கும் என்க.

கோரைப்பாயின் குணம்.

கோரையின்பாய் நற்குணமாங் கூறரிய மந்தமறும்
கூரிய தேகங் குளிர்ச்சியுறும் — வாருலகில்
நன்னித் திரைகூடும் நாடாது ரூட்சையிதை
யுன்னிப் புவியி லுரை.

இ-ள். நற்குணமுள்ள கோரைப் பாயினால் அக்கினிமந்தமும், சுரவேகமும் நீங்கும். தேகக் குளிர்ச்சியும் சுகநித்திரையும் உண்டாகும் என்க.

சாதிப்பாயின் குணம். (இதுவே பிரப்பம்பாய்.)

சாதிப்பாய் சீதளமாஞ் சாருமித னன்மூலம்
பேதிக்குட் சீதம் பிசறுங்காண் — வாதிக்கும்
சீதசுரங் காணுஞ் சிரசு மிகக்கனக்கும்
ஏதமிகு நோயார்க் கிசை.

இ-ள். பிரப்பம் பாயினால் மூல ரோகம், சீதமலப்பேதி, சீதசுரம், சிரோபாரம் இவையுண்டாம். இது சீதளமாம். சாதி-பிரம்பு.

பேரீச்சோலைப்பாயின் குணம்.

பேரீச்சுப் பாயினிதம் பேரா துறங்குவர்க்குப்
பாரித்த குன்மம் பறக்குங்காண் — பூரித்த
வீக்கமறுந் தீபனமா மெய்யைவெளுப் போடட்ண
மாக்கிவிடு மென்றே யறி.

இ-ள். பேரீச்சோலைப் பாயில் தூங்குபவருக்கு வாத குன்மமும், சோபையும் நீங்கும். பசி, பாண்டு, உட்டணதிக்கம் இவையுண்டாம் என்க.

சிற்றீச்சோலைப்பாயின் குணம்.

சிற்றீச்சுப் பாயிற் றினமும் படுப்பவருக்
குற்றிடுமே காந்த லுடம்புலரும் — சுத்தியதோர்
வாயுவறும் பித்தமறு மற்றுங் கபந்தீரும்
தாயகமா மிக்குணத்தைச் சாற்று.

இ-ள். சிற்றீச்சம் பாயில் துயில்பவருக்கு, சூடும், தேகவுலர்தலும் உண்டாம். ஆவிருதவாதம், அதிபித்தம், கபச்சினம் இவைகள் நீங்கும் என்க.

மூங்கிற்பாயின் குணம்.

நீர்க்கடுப்பு மெத்தவுறும் நீடுபித்த மும்பெருகுஞ்
ஆர்க்கு மனல மதிகரிக்கும் — பார்க்குளுறை
கோங்கி னறியமுகைக் கொங்கை மலர்த்திருவே
மூங்கிலின் பாய்க்கு மொழி.

இ-ள். கோங்கரும்பனைய கொங்கையின்னே! மூங்கிற்பாய்க்கு மூத்திர கிரிச்சரம் என்னும் நீர்க்கடுப்பு, பித்தகோபம், மிகு சூடு ஆகிய இவைகள் விருத்தியடையும் என்க.

தலைக்கணையின் குணம்.

கழுத்திற்குந் தோளிற்குங் கண்ட வுயர்வாய்
வழுத்துநீ ளத்தில்வைத்த மட்டாய் — இழைத்தநறும்
பஞ்சின் றலைக்கணைக்கெப் பானரம்பு நன்குறும்போம்
தஞ்சின் றலைக்குழுச்சிச் சூர்.

இ-ள். கழுத்துக்கும் தோளுக்கும் மத்தியிலிருக்கும் அளவான உயரமுள்ளதாகவும், நீளம் வேண்டியமட்டாகவும் இலவம்பஞ்சினால் தைப்பித்த தலைக்கணையின்மேல் சிரசுவைத்துப் படுத்துக்கொண்டால், பாதாதி கேசம்வரைக்குமுள்ள எந்தப்பக்கத்து நரம்புகளும் பிசகாமல் சமமாக விருக்கும். அதுவுமல்லாமல் சிரசைப்பற்றிய ஆவர்த்தநோய்களும் நீங்கி விடும் என்க.

ஓர் மருத்துவன்.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருவனந்தல் காலைச்சந்திக் கட்டளை
வே. தில்லைநாயக முதலியார் அவர்கள்மீது பாடிய

இ ர ங் க ற் பா.

பூமா திணுக்கெழின் முகமெனப் பொலியுந்
தில்லையம் பதியிற் றிருநடங் குயிற்றும்
பரசிவப் பெருமான் றிருவடித் தொண்டு
வழிவழி யியற்றும் விழுமிய குலத்தின்
கண்ணெனத் தோன்றிய புண்ணிய சீல!
கசடறு கல்வியுந் தகவொழுக்கமும்
மாசறு குணமுந் தேசுறு சீர்த்தியும்
இன்னன பலவும் வெறில்பெறத் தோன்றும்
தில்லைநா யகப்பேர்ச் சிறப்புறு செம்மால்!

ஊசற் கயிறற் றுலவ் ஆசற்குத்
தாய்தரை யேயாந் துணையென நீயே
நல்லியற் புலவன் செல்லுறழ் வள்ளல்
இன்றமிழ் வாணர் யாவரும் புகழுந்
தருக்க குடார தாலு தாரி
என்னை நீங்கி யெம்மா னிணையடி
எகிய காலத் தென்னைத் தேற்றி
இலக்கண விலக்கிய வின்னமு தூட்டிக்
கவலை யகற்றிக் கருணை செய்தனை
இன்று, நீயும் பிரிந்தே நீள்கதி யுற்றனை
இவ்வுல கத்தோ ரின்னல் மீக்கொள
அவ்வுல கத்தோர்க் களித்தனை யின்பம்
நின்னைப் பிரித்த வென்னுடை யுள்ளம்
அழலிடைப் பட்ட மெழுகே யெனவும்
சூறையிற் பட்ட சிறுதுரும் பெனவும்
அல்லலிற் பட்டே யலைகின்ற தையோ
ஆதலின், அல்ல லகற்றி யடிய னேன்பால்
திருவுளம் வைத்தெனைத் தெளிவுறச் செய்து
போற்றுத ருனே சாற்றரு முணர்வோய்
நின்னருங் கடமை யென்றே
நின்கழல் வணங்குவ னன்புடைக் குருவே.

C. S. இராஜாப்பிள்ளை,
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்,
சபாநாயக முதலியார் இந்து ஹைஸ்கூல், சீகாழி.

சந்தாநேயர்களுக்கு அறிவிப்பு.

டிசம்பர் மாதத்தோடு சந்தாத்தொகை முடிவாகப்பெற்ற சந்தாநேயர்கள், வழக்கம்போல் பத்திரிகை யனுப்பிக்கொண்டு வருவதற்கு, தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதுந் தவிர, தயைசெய்து 1918-ம் வருடத்துத் தங்கள் சந்தாத் தொகையை உடனே யனுப்பிவிடுமாறும் பிரார்த்திக்கப்படுகின்றார்கள்.

பத்திரிகை வேண்டாத நேயர்கள் வீண்செலவிற்கும் நட்டத்திற்கும் நம்மை உட்படுத்தாமல் முன்னதாகவே தெரிவித்துவிட்டால் அதையே ஓர் பேருபகாரமாகக் கொள்ளுவேம்.

பத்திராதிபன்.

சாந்தி செய்யும். மூளையைப் பலப்படுத்தி, ஞாபக சக்தியை அதிகப்படுத்தும். மாணாக்கர்கள், வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள், பகைக்கத்தக்க குணமுள்ள காபி, தேயிலையை விட்டுவிட்டு, இதை உபயோகிக்க அருமையான சூர்ணம். டப்பா 1-க்கு விலை அணா 6, வி. பி. செலவு அணா 3 பிரத்தியேகம்.

25. சர்பத்துகள்:—திராக்ஷைப்பழம், நன்னாரிவேர், ரோஜா புஷ்பம், வாழைப்பழம், எலுமிச்சம்பழம், மாதுளம்பழம், கிச்சிலிப்பழம், பாதம், அன்னாசிப்பழம், துருஞ்சிப்பழம், கொமட்டிப்பழம், சிர்மை இலந்தைப்பழம், தாமரை புஷ்பம் இஞ்சி சர்பத்துகள் ஷெடி சர்பத்துகள் பழ வகைகளின் சத்துக்களால் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும் துளிகள் கணக்காகவே உபயோகிக்கவேண்டும். ஒரு சேர் குளிர்ந்த ஜலத்திலாவது, சோடாவாட்டரிலாவது, சுமார் 5 துளிகள் சேர்த்தால் மிகவும் இனிப்பாகவும், எந்த பழ சர்பத்து உபயோகிக்கப்பட்டதோ, அந்த பழத்தின் மதுரமான வாசனையோடுங் கூடிய சர்பத்தாகும். ½ அவுன்சு சீசாக்களில் விற்கப்படும். இச்சிறு சீசாவிலுள்ள சர்பத்து 50 சேர் குளிர்ந்த ஜலத்துடனாவது சோடாவாட்டரோடாவது சேர்த்தால் 50 சேர் உசிதமான சர்பத்தாகும். அரை அவுன்சுள்ள சீசா 1-க்கு விலை அணா 8, வி. பி. செலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

P. SUBBAROY.
AYURVEDIC PHARMACY,
Sri Venkatesa Perumal Koil Sannathy
TANJORE.

N. B. — என்னுடைய ஔஷதசாலையின் ஹெட் ஆபீசை பறங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால் இனி எல்லா ஆர்டர்களும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக் கோருகிறேன். றங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.

என்ன செய்கிறது?

அநேக ஜனங்கள் வியாதியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தும் என்ன செய்கிறதென்று நினைத்துக் கொண்டு வியாதியை வளரவிட்டுத் துன்பத்துக்கே ஆளாகிறார்கள். அந்தோ? பரிதாபம் ஏன் அங்ஙனம் அவதிப்படல்வேண்டும்? உலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் சுகத்தை யனுபவிக்கப் பாத்தியபட்டவர்கள். ஒழுங்கீனத்தினால் வியாதியுண்டானால் தக்க பரிகாரம் தேடிக் கொள்வதே நலம். நாங்கள் ஆயிரக்கணக்கான வியாதிஸ்தரைக் குணப்படுத்தி யிருக்கிறோம். உங்களையும் குணப்படுத்த சித்தமா யிருக்கிறோம். விபரமான எங்கள் கியாட்லாக்கை இனமாய்ப் பெற்று வாசித்துப்பாருங்கள். அல்லது வியாதியைப்பற்றி விபரமாய் எழுதுங்கள். 35-வருஷ அனுபவமுள்ளவர்கள்.

வைத்தியசாஸ்திரி மணிசங்கர் கோவிந்தஜி,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

157, பிராட்வே மதராஸ்.